# Tnpsc Model Question Paper 30 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. பகத்சிங் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரி?
1. மைக்கேல் ஓ டையல் அவரால் கொல்லப்பட்டார்
2. லாகூரில் லத்தி அடிக்குக் காரணமான ஜான் சான்டர் என்ற போலீஸ் அதிகாரியைச் சுட்டுக்கொன்றார்
(அ) 1 மட்டும் சரி **(ஆ) 2 மட்டும் சரி**
(இ) 1 மற்றும் 2 சரி (ஈ) மேலே உள்ள எதுவுமில்லை

2. 1946 அமைச்சரவை தூதுக்குழுவின் உறுப்பினர்களாக இந்தியா வந்தவர்கள்
**(அ) பெத்திக் லாரன்ஸ் பிரபு, சர் ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் மற்றும் ஏ.வி.அலெக்சாண்டர்**
(ஆ) பெத்திக் லாரான்ஸ் பிரபு, சர் சைமைன், ஏ.வி. அலெக்சான்டர்
(இ) பெத்திக்லாரன்ஸ் பிரபு, சர் சைமன், ஏ.வி.அலெக்சான்டர்
(ஈ) ஸ்டாப்போர்டு கிரிப்ஸ், சர் சைமன், ஏ.வி.அலெக்சாண்டர்

3. வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை வடிவமைத்தவர்
**(அ) காந்திஜி** (ஆ) சுபாஷ் சந்திர போஸ் (இ) சி.ஆர்.தாஸ் (ஈ) ஜவஹர்லால் நேரு

4. "ஹரிஜன்" பத்திரிக்கை யாரால் தொடங்கப்பட்டது?
(அ) டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார் **(ஆ) காந்திஜி**
(இ) எம்.சி.ராஜா (ஈ) ஜவஹர்லால் நேரு

5. கீழ்க்காண்பனவற்றுள் சரியான பொருத்தங்களைத் தேர்ந்தெடுக்கவும்
1. இராஜாஜி அமைச்சரவையை ஏற்படுத்திய ஆண்டு 1939
2. வேதாரண்ய சத்தியாகிரகம் 1939
3. மறு சீரமைப்பு கல்விமுறை 1958
4. சி.ஆர்.பார்முலா (திட்டம்) 1944
(அ) 1 மற்றும் 3 (ஆ) 1 மற்றும் 2 **(ஆ) 2 மற்றும் 4** (ஈ) 3 மற்றும் 4

6. 1932 ஆண்டு பூனா ஒப்பந்தம் மகாத்மா காந்தி மற்றும் இவருடன் உறுதிப்படுத்தப்பட்டது.
(அ) திலகர் (ஆ) வினோபா பாவே (இ) சந்திர சேகர் ஆசாத் **(ஈ) அம்பேத்கர்**

7. இந்திய தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்ட ஆண்டு
(அ) கி.பி.1884 **(ஆ) கி.பி.1885** (இ) கி.பி.1886 (ஈ) கி.பி.1887

8. சிந்துவெளி வரிவடிவங்கள் பழந்தமிழோடு தொடர்படையது என்று தெரிவித்தது யார்?
**(அ) ஐ.மகாதேவன்** (ஆ) நாகசாமி
(இ) யூ.குனோவோசோவ் (ஈ) ஆ.வேலுப்பிள்ளை

9. சங்க இலக்கியத்தில் போர் கடவுளாக குறிப்பிடப்பட்ட தெய்வம் எது?
(அ) திருமால் (ஆ) சிவன் **(இ) முருகன்** (ஈ) இந்திரன்

10. சங்க காலத்தில் "அம்பணம்" என்பது யாது?
(அ) ஒரு இசைக்கருவி **(ஆ) நெல்லை அளக்க பயன்படும் கருவி**
(இ) ஒரு வகை நடனம் (ஈ) ஒரு வகை திருவிழா

11. குடுமியான்மலை கல்வெட்டு -------- பற்றி விளக்குகின்றது
**(அ) இசை** (ஆ) நாடகம் (இ) கிராம ஆட்சி முறை (ஈ) நடனம்

12. கீழ்கண்டவற்றில் எது (எவை) பொருந்தவில்லை?
1. பெருங்கற்கால புதையல்– சித்தன்வாசல்
2. தாழி புதையல்–மல்லப்பாடி
3. கண்ணாடி தொழிற்சாலை–காரைக்காடு
4. இசைக்கல்வெட்டு–அரச்சலூர்
(அ) 1 மட்டும் **(ஆ) 2 மற்றும் 4 மட்டும்** (இ) 3 மற்றும் 4 மட்டும் (ஈ) 4 மட்டும்

13. கீழ்கண்டவற்றை பொருத்துக:

| இலக்கியம் | மக்கள் வாழ்வியல் |
|---|---|
| அ. சிலப்பதிகாரம் | 1. உரிமை சுற்றம் |
| ஆ. கலித்தொகை | 2. அடிமை முத்திரையிடல் |
| இ. மலைபடுகடாம் | 3. அரண்மனையின் ஆடம்பர உபகரணங்கள் |
| ஈ. நெடுநல்வாடை | 4. மக்கள் உணவு பழக்க வழக்கம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 1 | 3 | 4 |
| **ஆ.** | **1** | **2** | **4** | **3** |
| இ. | 4 | 3 | 2 | 1 |
| ஈ. | 1 | 2 | 3 | 4 |

14. பின்வரும் எந்த கல்வெட்டில், "தமிழ் கூட்டமைப்பின்" சீர்குலைவு பற்றி குறிப்பிடுகிறது?
(அ) அலகாபாத் தூண் கல்வெட்டு **(ஆ) காரவேலாவின் ஹதிகும்பா கல்வெட்டு**
(இ) ஜீனாகத் கல்வெட்டு (ஈ) மெஹ்ரௌலி தூண் கல்வெட்டு

15. பின்வருவனவற்றுள் சரியானதை பொருத்துக:
1. பெரும்பாலை–தருமபுரி மாவட்டம்
2. மயிலாடும்பாறை–தூத்துக்குடி மாவட்டம்
3. சிவகளை–கிருஷ்ணகிரி மாவட்டம்
4. துலுக்கார்பட்டி–திருநெல்வேலி மாவட்டம்
**(அ) 1 மற்றும் 4 சரி** (ஆ) 2 மற்றும் 3 சரி
(இ) 1 மற்றும் 2 சரி (ஈ) 3 மற்றும் 4 சரி

16. ஒவாமலை தொல்லியல் இடம் எங்கு அமைந்துள்ளது?
**(அ) மதுரை** (ஆ) திருநெல்வேலி (இ) சிவகங்கை (ஈ) தஞ்சாவூர்

17. அத்திரப்பாக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கற்கருவிகள் ------------ காலத்தை சார்ந்தவை
(அ) பழைய கற்காலம் (ஆ) புதிய கற்காலம்
**(இ) இடை கற்காலம்** (ஈ) பெருங்கற்காலம்

18. பழங்கற்கால கருவிகள் என்பது.
1. ஈட்டிகள்
2. கூர்மையான முனைகள் கொண்ட வட்டமான கற்கள்
3. இருபுறமும் கூர்மையான கத்திகள்

4. முட்டை வடிவில் கூர்மையான கருவிகள்

(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் (இ) 1, 2 மற்றும் 3 மட்டும் **(ஈ) 1, 2, 3 மற்றும் 4 மட்டும்**

19. கீழ்கண்டவைகளி; தமிழ் மன்னர்களின் கூட்டமைப்பை தெரிவிக்கும் கல்வெட்டு எது?

**(அ) ஹிதிகும்பா கல்வெட்டு** (ஆ) வேள்விக்குடி பட்டய செப்பேடு

(இ) திருக்கோவிலூர் கல்வெட்டு (ஈ) சின்னமனூர் பட்டய செப்பேடு

20. ஆலங்குளம் அகழ்வாராய்ச்சி இடம் ---------- மாவட்டத்தில் அமைந்துள்ளது

**(அ) இராமநாதபுரம்** (ஆ) மதுரை (இ) திருநெல்வேலி (ஈ) தஞ்சாவூர்

21. தொல்பொருள் ஆராய்ச்சி இடங்களைப் பொருத்துக:

அ. ஆதிச்சநல்லூர் 1. சிவகங்கை

ஆ. மாங்குளம் 2. தூத்துக்குடி

இ. கொடுமணல் 3. மதுரை

ஈ. கீழடி 4. ஈரோடு

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **2** | **3** | **4** | **1** |
| ஆ. | 3 | 4 | 2 | 1 |
| இ. | 4 | 3 | 1 | 2 |
| ஈ. | 2 | 3 | 1 | 4 |

22. சோழர்களை பற்றி குறிக்கும் முதல் கல்வெட்டு எது?

(அ) அசோகரின் சிறிய பாறைக் கல்வெட்டுகள்

(ஆ) அசோகரின் 12வது பாறைக் கல்வெட்டுகள்

**(இ) அசோகரின் 13வது பாறைக் கல்வெட்டுகள்**

(ஈ) அசோகரின் 14வது பாறைக் கல்வெட்டுகள்

23. தமிழ்நாட்டில் கோவிட்-19 இன் போது நகரங்களுக்குப் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் எதிர்கொண்ட முக்கிய பிரச்சனைகளாவன?

1. உணவுப்பிரச்சனை.

2. ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பு.

3. அறுவடைபணிகள் தாமதமானது

(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் **(இ) 1 மற்றும் 2 மட்டும்** (ஈ) 1, 2 மற்றும் 3

24. MSME திட்டக் குறிப்பு 2017-18ன் படி குறு, சிறு நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டில் தமிழ்நாட்டின் தர வரிசை என்ன?

**(அ) 1** (ஆ) 2 (இ) 3 (ஈ) 4

25. 2020-21 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, தமிழ்நாட்டில் உணவுப் பொருட்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாவட்டம்

(அ) விழுப்புரம் மாவட்டம **(ஆ) தஞ்சாவூர் மாவட்டம்**

(இ) சேலம் மாவட்டம் (ஈ) மதுரை மாவட்டம்

26. 1983ம் ஆண்டு ஆகஸ்டு 15ம் நாள் கிராம நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் பின்வரும் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டது?

**(அ) கிராமப் பகுதிகளில் இலாபகரமான வேலைவாய்ப்பு உருவாக்கவும் மற்றும் ஆக்கவளம் கொண்ட சொத்துக்களை உருவாக்கவும்**
(ஆ) கிராமப்பகுதிகளில் பெண் கல்வியை வலுப்படுத்த
(இ) கிராமப் புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க
(ஈ) சிறு மற்றும் குறு விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க

27. துவக்கப்பள்ளி மாணவர்களுக்கான ஊட்டச்சத்து வழங்கும் தேசியத் திட்டம் என்று தொடங்கப்பட்டது?
**(அ) 15 ஆகஸ்ட் 1995** (ஆ) 16 ஆகஸ்ட் 1995
(இ) 15 ஜீலை 1995 (ஈ) 16 ஜீலை 1995

28. பொதுமக்களுக்கான அதிகாரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் பெற்ற பிறகு பதில் அளிப்பதற்கான கால வரம்பு
(அ) 20 நாட்கள் (ஆ) 25 நாட்கள் **(இ) 30 நாட்கள்** (ஈ) 40 நாட்கள்

29. பின்வருவனவற்றுள் எது டிஜிட்டல் இந்தியா முன்னெடுப்புகளின் நோக்கம் அல்ல?
(அ) வணிகத்திற்காக டிஜிட்டலாக மாற்றப்பட்ட சேவைகள்
(ஆ) பணப் பரிவர்த்தனைகளைப் பணத்தைக் கையில் எடுத்துச் செல்லாமல் மின்னணு மூலம் செய்தல்
(இ) இணைய வழியில் அனைத்து அரசு சேவைகளின் தடையற்ற ஒருங்கிணைப்பு
**(ஈ) இணையவழிச் சேவைகளின் செலவைக் குறைத்தல்**

30. சாதியக் கட்டமைப்பில் கூறுகளில் இல்லாதது எது?
(அ) சமூகத்தைப் பல்வேறுப் பிரிவுகளாக்குதல்
(ஆ) சாதிய படிநிலையின் மூலாதாரம்
**(இ) சாதிய படிநிலையின் வேறுபாடற்ற நிலையை அனுமதிக்கிறது**
(ஈ) கட்டமைக்கப்பட்ட சமூகப் படிநிலையின் அடிப்படை

31. TNRRIS–யின் விரிவாக்கம்:
(அ) Tamil Nadu Rural Road Investment Scheme
**(ஆ) Tamil Nadu Rural Road Improvement Scheme**
(இ) Tamil Nadu Rural Road Introduction Scheme
(ஈ) Tamil Nadu Rural Road Investment Scheme

32. இவற்றுள் எவை இந்தியாவின் அதிகப் பிறப்பு விகிதத்திற்குக் காரணமான சமூக–பொருளாதாரக் காரணி ஆகும்.
(அ) குறைந்த கல்வியறிவு விகிதம் **(ஆ) பெரிய அளவிலான வறுமை**
(இ) வரதட்சணை (ஈ) வேலையின்மை

33. ஒரு குறிப்பிட்ட அசலானது 8% வட்டி வீதத்தில் எத்தனை ஆண்டுகளில் மூன்று மடங்காகும் எனக் காண்க
(அ) 5 ஆண்டுகள் (ஆ) 15 ஆண்டுகள் **(இ) 25 ஆண்டுகள்** (ஈ) 35 ஆண்டுகள்

34. கடனாக வழங்கப்பட்ட அசல் ரூ.48, 000க்கு 2 ஆண்டுகள் 3 மாதக் காலத்திற்குப் பிறகு தனிவட்டி மூலம் பெறப்பட்ட மொத்தத் தொகை ரூ.55, 560 ஆக இருந்தது எனில் வட்டி வீதத்தைக் காண்க:
(அ) 6% (ஆ) 8% **(இ) 7%** (ஈ) 7.5%

35. ரூ.6, 750க்கு 219 நாட்களுக்கு 10% வட்டி வீதம் தனிவட்டி காண்க:
(அ) ரூ.415 (ஆ) ரூ.395 (இ) ரூ.425 **(ஈ) ரூ.405**

36. நீங்கள் ஒரு தெருவில் நடந்து செல்கிறீர்கள் நீவிர் சந்தித்தவர்களின் ஒரு புதிய மனிதனைத் தோந்தெடுக்கவும். ஆந்த மனிதரின் பிறந்தநாள் ஞாயிற்றுக்கிழமையாக இருக்க நிகழ்தகவு என்ன?
(அ) 5/7 (ஆ) 4/7 (இ) 3/7 **(ஈ) 1/7**

37. கணக்கிடுக: (100–1) (100–2) (100–3) ....... (100+1) (100+2) (100+3) ?
**(அ) 0** (ஆ) 1 (இ) 100 (ஈ) 1000

38. வட்டி அரை வருடமாக கூட்டப்படும்போது 18 மாதங்களுக்கு ஆண்டுக்கு 10% என்ற விகிதத்தில் ரூ.1,000 மீதான கூட்டு வட்டியைக் காண்க
(அ) ரூ.1, 157.63 **(ஆ) ரூ.157.63** (இ) ரூ.167.73 (ஈ) ரூ.157.36

39. 2% ஆண்டு வட்டியில் 2 ஆண்டுகளுக்கு ஓர் அசலுக்குக் கிடைத்த கூட்டு வட்டிக்கும் தனிவட்டிக்கும் இடையே உள்ள வித்தியாசம் ரூ.1 எனில் அசல் ஆனது ----------- ஆகும்
(அ) ரூ.2, 000 (ஆ) ரூ.1, 500 (இ) ரூ.3, 000 **(ஈ) 2, 500**

40. ஒரு கனசதுரத்தின் பக்கப்பரப்பு 600 செமீ$^2$ எனில் அதன் மொத்தப்பரப்பு யாது?
(அ) 150 செமீ$^2$ (ஆ) 400 செமீ$^2$ **(இ) 900 செமீ$^2$** (ஈ) 300 செமீ$^2$

41. ஒரு கனசதுரத்தின் மொத்தப் புறப்பரப்பு 486 செமீ$^2$ எனில் அதன் பக்கப்பரப்பைக் காண்க:
(அ) 234 செமீ$^2$ **(ஆ) 324 செமீ$^2$** (இ) 432 செமீ$^2$ (ஈ) 342 செமீ$^2$

42. இரு கூம்புகளுடைய கன அளவுகளின் விகிதம் 2 : 3 ஆகும். இலண்டாம் கூம்பின் உயரம் முதல் கூம்பின் உயரத்தைப் போல் இரு மடங்கு எனில் அவற்றின் ஆரங்களின் விகிதம் காண்:
(அ) 1 : $\sqrt{2}$ **(ஆ) 2 :$\sqrt{3}$** (இ) 3 : $\sqrt{3}$ (ஈ) 2 : 3

43. இரு சார்பகா எண்களின் மீ.பொ.ம 5005. இவற்றின் ஓர் எண் 65 எனில், மற்றொரு எண்
(அ) 99 (ஆ) 88 **(இ) 77** (ஈ) 66

44. 1, 8, 9, 64, 25, ....... எனற் தொடரின் அடுத்த உறுப்பு
(அ) 144 (ஆ) 26 (இ) 169 **(ஈ) 216**

45. 2, 4, 8, 16, ..........1024 என்ற தொடரில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை என்ன?
(அ) 9 (ஆ) 11 (இ) 12 **(ஈ) 10**

46. 1, 2, 3, 5, 8, ?, 21 என்ற தொடரின் விடுபட்ட உறுப்பைக் காண்க:
(அ) 9 (ஆ) 11 **(இ) 13** (ஈ) 15

47. 1 மீ 20 செ.மீ, 3 மீ 60 செ.மீ, மற்றும் 4 மீ அளவுகளை கொண்ட கயிறுகளின் நீளங்களை சரியாக அளக்க பயன்படும் கயிற்றின் அதிகபட்ச நீளம்
**(அ) 40 செ.மீ** (ஆ) 4 மீ (இ) 20 செ.மீ (ஈ) 2 மீ

48. $(a-b)^2$, $(b-c)^3$, $(c-a)^4$ ன் மீ.பொ.வ. காண்க:
(அ) $(c-a)^4$ (ஆ) $(a-b)^2$ (இ) 0 **(ஈ) 1**

49. கொடுக்கப்பட்ட எண்களின் இலக்கங்களை தங்களுக்குள் பெருக்கும்போது கிடைக்கும் தொகையில் எந்த எண்ணின் தொகை மிகச் சிறியதாக இருக்கும்? 728, 412, 901, 632

(அ) 412 (ஆ) 632 (இ) 728 **(ஈ) 901**

50. "GIVE" என்பதன் குறியீடு 5137 மற்றும் "BAT" என்பதன் குறியீடு 924 எனில் "GATE" என்பது எப்படி குறிக்கப்படும்?

(அ) 2547 **(ஆ) 5247** (இ) 5427 (ஈ) 5724

51. ஒரு சமையல் குறிப்பில், ஒவ்வொரு 1 1/2 கோப்பை அரிசிக்கு, 2 3/4 கோப்பைகள் தண்ணீர் தேவைப்படுகிறது என கூறப்பட்டுள்ளது எனில், அரிசி மற்றும் தண்ணீருக்கு இடையேயான விகிதத்தை எழுதுக:

(அ) 1:2 (ஆ) 3:11 **(இ) 6:11** (ஈ) 3:8

52. ஒரு கோடு நான்கு பாகங்களாகப் பிரிக்கப்படுகிறது அதன் விகிதங்கள் முறையே 1:2:3:6, கோட்டின் நீளம் 960 மி.மீ. எனில் ஒவ்வொரு பாகத்தின் அளவைக் காண்க:

(அ) 100mm : 140 mm : 240 mm : 480mm (ஆ) 100mm : 160mm : 260mm : 440mm

**(இ) 80mm : 160mm : 240mm : 480mm** (ஈ) 80mm : 200mm : 240mm : 440mm

53. இரு கனச்சதுரங்களின் பக்கங்களின் விகிதம் 2:3 எனில் புறப்பரப்புகளின் விகிதம்

(அ) 4:6 **(ஆ) 4:9** (இ) 6:9 (ஈ) 16:36

54. ஒரு நாளில் 14 தொழிலாளர்கள் 42 அடுக்குகளை அமைகின்றனர், எனில் 23 தொழிலாளர்கள் எத்தனை அடுக்குகளை அமைப்பார்கள்?

(அ) 60 (ஆ) 65 **(இ) 69** (ஈ) 68

55. A–யின் 25% என்பது B–யின் 40% க்குச் சமம் எனில், B என்பது A–வில் எத்தனை சதவீதம்?

(அ) 65% (ஆ) 15 % (இ) 67.5% **(ஈ) 62.5%**

56. அகிலா ஒரு தேர்வில் 80% மதிப்பெண்களைப் பெற்றாள். அவள் பெற்றது 576 மதிப்பெண்கள் எனில், அந்த தேர்வின் மொத்த மதிப்பெண்களைக் காண்க:

(அ) 750 (ஆ) 830 **(இ) 720** (ஈ) 870

57. x–y=5 மற்றும் xy=14 எனில் $x^3-y^3$ன் மதிப்பைக் காண்க:

(அ) 225 **(ஆ) 335** (இ) 325 (ஈ) 330

58. தெங்கு அரைக்கோளத்தில் மில்கி வே (Milkyway) இவ்வாறு தென்படும்?

(அ) இருண்டதாக **(ஆ) பிரகாசமானதாக** (இ) பெரியதாக (ஈ) சிறியதாக

59. "நீர்த்தேக்கங்களைப் பாதுகாப்பது, அணைகள் கட்டுவது. மனித ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்ற தடுப்பு நடவடிக்கைகளால் பாதுகாக்க முடியும்" மேற்குறிப்பிட்ட விளக்கம் பின்வரும் இயற்கைப் பேரழிவுகளில் எதைத் தடுக்க குறிப்பிடுகிறது?

**(அ) வெள்ளம்** (ஆ) எரிமலை (இ) நில நடுக்கம் (ஈ) ஆழிப்பேரலை

60. நாகசாகி அணுகுண்டு வீச்சில் பயன்படுத்திய அணுகுண்டு

(அ) லிட்டில் பாய் **(ஆ) ஃபேட் மேன்** (இ) பீனிக்ஸ் (ஈ) லிட்டில் கேர்ள்

61. ஜெர்ம் பிளாசம் கோட்பாட்டை முன்மொழிந்தவர்
(அ) சார்லஸ் டார்வின் **(ஆ) அகஸ்ட் வொய்ஸ்மேன்**
(இ) கிரகர் ஜோஹான் மெண்டல் (ஈ) ஹீகோ டிவரிஸ்

62. தவாரங்களின் வளர்ச்சிக்கு மிக முக்கியமான மூன்று தனிமங்கள் (முதன்மை ஊட்டசத்துகள்)
**(அ) K, P மற்றும் N** (ஆ) N, P மற்றும் Mg
(இ) Fe, P மற்றும் N (ஈ) Ca, Mg மற்றும் Fe

63. ஹைட்ரோகுளோரிக் மற்றும் அசிடிக் அமிலங்களின் இணை காரங்களானது --------- மற்றும் ----------- ஆகும்
(அ) $H^+$மற்றும் $H^-$ **(ஆ) $Cl^-$ மற்றும் $CH_3COO^-$**
(இ) $Cl^+$ மற்றும் $CH_3COO^-$ (ஈ) $Cl^-$ மற்றும் $CH_3COO^+$

64. எல்லா திரவத்துளிகளும் கோள வடிவை அடைவதற்குக் காரணம்
(அ) மீள்திறன் **(ஆ) பரப்பு இழுவிசை** (இ) பாகுநிலை (ஈ) புவி ஈர்ப்பு

65. எப்படி தஞ்சாவூர் பொம்மை கீழே விழாமல் தொடர்ச்சியாக ஆடிக் கொண்டு இருக்கிறது?
(அ) நிறை மையம் (ஆ) முடுக்க மையம்
**(இ) ஈர்ப்பு மையம்** (ஈ) இவற்றில ஏதுமில்லை

66. எந்தச் சட்டத்தால் உத்தராஞ்சல் என்ற பெயர் உத்தரகாண்டு என்று மாற்றப்பட்டது?
**(அ) உத்தராஞ்சல் (பெயர் மாற்றம்) சட்டம், 2006**
(ஆ) உத்தராஞ்சல் (பெயர் மாற்றம்) சட்டம், 2000
(இ) உத்தராஞ்சல் (பெயர் மாற்றம்) சட்டம், 2001
(ஈ) உத்தராஞ்சல் (பெயர் மாற்றம்) சட்டம், 2003

67. குடிபோதையில் வாகனம் ஓட்டுபவரின் மூச்சு பகுப்பாய்வு சோதனையில் பயன்படுத்தப்படும் சேர்மம்
(அ) $KMnO_4$ (ஆ) $CuSO_4$ $5H_2O$ (இ) $H_2O_2$ **(ஈ) $K_2Cr_2O_7$**

68. கூற்று (A): இந்தியா 20 நதிப்படுகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் 12 பெரிய படுகைகள் மற்றும் 9 இணைப் படுக்கைகள் உள்ளன.
காரணம் (R): இந்த படுகைகள் ஒவ்வொன்றும் 10, 000 சதுர கிலோ மீட்டருக்கும் குறைவான வடிகால் பகுதியைக் கொண்டுள்ளது.
**(அ) (A) கூற்று சரி (R) காரணம் தவறு**
(ஆ) (A) கூற்று மற்றும் (R) காரணம் இரண்டும் சரி (A) கூற்றுக்கான (R) காரணம் சரி
(இ) (A) கூற்று தவறு (R) காரணம் சரி
(ஆ) (A) கூற்று மற்றும் (R) காரணம் இரண்டும் சரி (A) கூற்றுக்கான காரணம் (R) தவறு

69. எந்தச் சமூகப் பாதுகாப்புத் திட்டம பெண்களின் ஆரோக்கியத்திற்கும் மகப்பேறுக்கும் பயனளிக்கிறது?
**(அ) AB–PMJAY** (ஆ) PMSBY (இ) PMJJBY (ஈ) PMJDY

70. பின்வருவனவற்றில் எது/எவை தவறாகப் பொறுத்தப்பட்டள்ளன?
(அ) நம்தபா தேசியப்பூங்கா–அருணாசலப்பிரதேசம்
(ஆ) கேய்புல் லம்ஜோ தேசியப்பூங்கா–மேகாலயா
(இ) நோக்ரெக் தேசியப்பூங்கா–மணிப்பூர்

(ஈ) சிமிலிபால் தேசியப்பூங்கா–ஒடிசா

(அ) அ மற்றும் ஈ **(ஆ) ஆ மற்றும் இ** (இ) ஈ மட்டும் (ஈ) அ மட்டும்

71. தமிழ்நாட்டின் மாமல்லபுரத்தில் அமைந்துள்ள நினைவுச்சின்ன தொகுப்புகளில் இடம் பெறாதது எது?

(அ) அர்ஜீனன் தபசு (ஆ) கடற்கரைக்கோயில் (இ) ஐந்து ரதம் **(ஈ) ஆயி மண்டபம்**

72. "சிற்றினங்களின் தோற்றம்" என்னும் புத்தகத்தை எழுதியவர்

(அ) லமார்க் (ஆ) டீவ்ரிஸ் **(இ) டார்வின்** (ஈ) ஒபாரின்

73. 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவில் மிகக் குறைந்த மக்கள் அடர்த்தியான 13 நபர்கள் 1 சதுர கி.மீ கொண்டுள்ள மாநிலம் எது?

**(அ) அருணாச்சல பிரதேசம்** (ஆ) மேகாலாயா (இ) மிசோரம் (ஈ) சிக்கிம்

74. பின்வருவனவற்றை பொருத்தவும்

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| அ. நோக்ரெக் | 1. ஒடிசா |
| ஆ. சிம்லிபால் | 2. மேகாலயா |
| இ. பஞ்ச்மார்கி | 3. அருணாச்சல பிரதேசம் |
| ஈ. டிகாங்–டிபாங் | 4. மத்திய பிரதேசம் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **2** | **1** | **4** | **3** |
| ஆ. | 1 | 2 | 3 | 4 |
| இ. | 2 | 3 | 4 | 1 |
| ஈ. | 3 | 4 | 1 | 2 |

75. இந்தியாவில், மிகப்பெரிய நன்னீர் ஏரியான லோக்டக் ஏரி --------ல் அமைந்துள்ளது

(அ) கேரளா (ஆ) உத்தராஞ்சல் **(இ) மணிப்பூர்** (ஈ) ராஜஸ்தான்

76. இராஜஸ்தானில் எந்தப் பகுதியில் சராசரி ஆண்டு மழைப்பொழிவு 20 செ.மீக்கும் குறைவாகப் பதிவாகிறது

(அ) கிழக்கு இராஜஸ்தான் **(ஆ) மேற்கு இராஜஸ்தான்**

(இ) தெற்கு இராஜஸ்தான் (ஈ) வடக்கு இராஜஸ்தான்

77. எந்த மாநிலங்களில் பழங்குடியினர் பட்டியியலிடப்படவில்லை?

**(அ) பஞ்சாப் மற்றும் ஹரியானா** (ஆ) பீகார் மற்றும் ஜார்கண்ட்

(இ) கர்நாடகா மற்றும் ஆந்திரப்பிரதேசம் (ஈ) நாகாலாந்து மற்றும் சிக்கிம்

78. கி.மு.3ஆம் நூற்றாண்டில் ------------ இந்தியாவில் உள்ள மக்களின் பொதுவான மொழியாகப் பயன்படுத்தப்பட்டது.

**(அ) பிராகிருதம்** (ஆ) சமஸ்கிருதம் (இ) ஹிந்தி (ஈ) பாலி

80. பிராமணர்கள் மீதும் ஜிஸியா வரியை விதித்த டில்லி சுல்தான் யார்?

(அ) பால்பன் **(ஆ) பெரோஸ் துக்ளக்**

(இ) அலாவுதீன் கில்ஜி (ஈ) முகமது–பின்–துக்ளக்

81. அலாவுதீன் நிர்ணயித்த முதல்தர குதிரையின் விலை

winmeen.com

**(அ) 100–120 தாங்காக்கள்** (ஆ) 120–140 தாங்காக்கள்
(இ) 141–160 தாங்காக்கள் (ஈ) 160–180 தாங்காக்கள்

82. தீன்–இலாஹியை ஏற்றுக் கொண்ட அக்பரின் அவையில் இருந்த ஒரே இந்து அரசவையினர்
(அ) ராஜா தோடர்மால் **(ஆ) ராஜா பீர்பால்**
(இ) ராஜா மான்சிங் (ஈ) தான்சேன்

82. கீழ்க்கண்ட பல்லவ ஆட்சியாளர்களில் யார் "வாதாபிகொண்டான்" என்ற பட்டத்தினைக் கொண்டவர்?
(அ) மகேந்திரவர்மன்–I (ஆ) மகேந்திரவர்மன்–I
**(இ) நரசிம்மவர்மன்–I** (ஈ) நரசிம்மவர்மன்–I

83. இந்தியாவில் அலுவலகப் பணி மொழிகளாக (அல்லது) ஆட்சிப்பணி மொழிகளாக அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் எத்தனை?
(அ) 14 (ஆ) 15 **(இ) 22** (ஈ) 18

84. "மன்னர் மக்களிடம் இருந்தும், மக்கள் மன்னரிடம் இருந்தும் விடுதலை பெற்றனர்" யாருடைய மரணத்தை குறித்து பதாயுனி இவ்வாறு கருத்து தெரிவித்தார்?
**(அ) முகமது பின் துக்ளக்** (ஆ) கியாசுதீன் துக்ளக்
(இ) ரஜப் (ஈ) ஷபர் கான்

85. பின்வரும் பத்தியைப் படித்து அதற்குயேற்றவாறு பதிலளிக்கவும். உங்கள் பதில் பத்தியின் நடையில் மட்டுமே அமைய வேண்டும்.
இந்தியாவில் சுற்றுச் சூழல், ஆடைகள், பண்டிகை, தோல் நிறம் போன்றவை பிராந்தியத்திற்கு பிராந்தியம் வேறுபடுகின்றன. பல வேறுபாடுகள் உள்ளன. பெரும்பாலும் ஒரே மாநிலத்தில் ஆனால் பொதுவான ஒன்று உள்ளது. "நமது தேசம்" இந்தியாவில் 22 முக்கிய மொழியும், 122 பிற மொழிகளும், தோராயமாக 1599 கிளைமொழிகளும் உள்ளன
பின்வருவனவற்றில் ஒன்று பத்தியில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது?
(அ) தேசியப் பொருளாதாரத்தை குறிக்கிறது
(ஆ) உயர்ந்து வரும் மக்கள் தொகை
**(இ) இந்தியாவின் வேற்றுமையில் ஒற்றுமையைக் குறிக்கிறது**
(ஈ) வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தைக் குறிக்கிறது

86. சட்டத்தின் ஆட்சியை வடிவமைத்தவர் யார்?
**(அ) ஏ.வி.டைசி** (ஆ) ஹெரோல்டு லாஸ் வெல்
(இ) அரிஸ்டாட்டில் (ஈ) ஜி.டி.ஹெச்.கோல்

87. கீழ்வருவனவற்றுள் எது மத்திய பட்டியலில் இடம்பெறவில்லை?
(அ) மாநகராட்சி வரி
(ஆ) விவசாய வருமானம் தவிர மற்ற வருமான வரி
**(இ) மூலதன வரி**
(ஈ) சுங்க வரி

88. பஞ்சாயத்து ராஜ் பற்றி கீழ்காணப்படுபவையில் எது/எவை சரியாக பொருத்தப்பட்டுள்ளன?
1. கே.சந்தானம் குழு–பஞ்சாயத்து ராஜ் தேர்தல்
2. ஆர், கே.கன்னா குழு– நியாயப் பஞ்சாயத்து

3. திருமதி.தயா சௌபே குழு – பஞ்சாயத்து ராஜ் நிதி நிலை
4. ஜி.ராமச்சந்திரா குழு – பஞ்சாயத்து ராஜ் பயிற்சி மையங்கள்

**(அ) 1 மற்றும் 4 சரி** (ஆ) 2 மற்றும் 3 சரி
(இ) 1 மற்றும் 3 சரி (ஈ) 3 மற்றும் 4 சரி

89. பிரதம அமைச்சரின் கடமை பற்றிக் கூறும் விதி யாது?
(அ) விதி 75 (ஆ) விதி 76 (இ) விதி 77 **(ஈ) விதி 78**

90. இந்திய குடிமக்களின் அடிப்படை கடமைகள் -----------ல் சேர்க்கப்பட்டுள்ளன
(அ) அரசியலமைப்பு பகுதி I (ஆ) அரசியலமைப்பு பகுதி II
(இ) அரசியலமைப்பு பகுதி IIIA **(ஈ) அரசியலமைப்பு பகுதி IV A**

91. இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் ----------ல் சேர்க்கப்பட்டுள்ளன.
(அ) பகுதி II (ஆ) பகுதி III (இ) பகுதி I (ஈ) பகுதி IV

92. வரதட்சணை தடைச்சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு
(அ) 1962 (ஆ) 1960 **(இ) 1961** (ஈ) 1963

93. 1946ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம் தேதி அரசியலமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு -------- என்பவர் தலைமை தாங்கினார்
(அ) டாக்டர் ராஜேந்திர பிரசாத் (ஆ) பண்டிதர் ஜவஹர்லால் நேரு
**(இ) டாக்டர் சச்சிதானந்த சின்கா** (ஈ) டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர்

94. 2010-11ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த தேசிய உற்பத்தியில் (2004-05 விலைப்படி) வேளாண்சார் மற்றும் வேளாண் துறையின் பங்களிப்பானது
(அ) 12.9 சதவீதம் (ஆ) 32.4 சதவீதம் (இ) 16.4 சதவீதம் **(ஈ) 14.4 சதவீதம்**

95. ஜவஹர்லால் நேருவின் கூற்றுப்படி விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு ----------- முக்கியமானது
(அ) நவீன வேளாண்மை **(ஆ) கனரக தொழில்கள்**
(இ) ஊரக மேம்பாடு (ஈ) மருத்துவ வசதிகள்

96. நிலச்சீர்திருத்த நோக்கங்களை நிறைவேற்ற எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கை திட்டங்கள்:
1. இடைத்தரகர்களை ஒழித்தல்.
2. நில உரிமையாளர்-குத்தகைதாரர் உறவை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நிலத்தின் மீது உச்ச வரம்பு வைப்பதன் மூலம் நிலத்தை மறுபங்கீடு செய்தல்.
3. சிதறிய நிலங்களை ஒருங்கிணைத்தல்.
4. நிலப் பதிவுகளை கணினிமயமாக்குல் மற்றும் புதுப்பித்தல்

(அ) 1 மற்றும் 2 மட்டும் (ஆ) 3 மற்றும் 4 மட்டும்
(இ) 1, 2 மற்றும் 4 மட்டும் **(ஈ) 1, 2, 3 மற்றும் 4**

97. சரக்கு மற்றும் சேவை வரி (GST) என்பது ஒரு --------
(அ) நேர்முக வரி **(ஆ) மறைமுக வரி** (இ) சமச்சீர் வரி (ஈ) குறைவிகித வரி

98. ரிசர்வ் வங்கி ரூபாய் நோட்டு அச்சிட்டு வெளியிடுவதில் ---------முறை பின்பற்றப்படுகிறது
(அ) அதிக பட்ச இருப்பு **(ஆ) குறைந்த பட்ச இருப்பு**

(இ) விகிதாசார இருப்பு (ஈ) நிலையான நம்பகத்தன்மை

99. பெரும் மந்த நிலையின் போது --------- அமைப்பு மக்களின் தேவைகளுக்கு பதிலளிக்க தவறியது

**(அ) முதலாளித்துவ முறை** (ஆ) சமதர்ம முறை

(இ) ஜனநாயக முறை (ஈ) கலப்பு பொருளாதார முறை

100. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் வளர்ச்சி இலக்கு விகிதம்---------

**(அ) 4.5%** (ஆ) 5.5% (இ) 3.5% (ஈ) 6.0%

winmeen.com